# சூறாவளியை எதிர்க்கும் சருகு!

Phone No. 4602
விலை அணா ஒன்று]
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.    MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (15—11—49) ※ வெளியீடு (16—11—49) | இதழ் 91

## சுதர்ம சுயராஜ்யம் நிர்மாணமாகிறது!

## சமத்துவம் கோருவது சுயநலப் பண்பாம்!

### சரிநீதியைத் தடுக்க சாஸ்திரியாரின் சவடால்!

"இன்று, இந்த நாடு பெற்றுள்ள புதிய நிலையால் வலது சாரிகளின் செல்வாக்குப் பெருகிக்கொண்டுவரும் இத்தருணத்தில், அகிம்சையையும் சத்தியத்தையும் அடிப்படையாகக்கொண்டு தேசியத்திற்காக உயிர் வாழ்பவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, அதனைப் பலப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகிறது. இந்தக் காங்கிரஸ் ஒன்றினால்தான், நாத்தீகத்தையும் பலாத்காரத்தையும் உள்ளடக்கிக் கொண்டும், சுயநல வகுப்புவாதப் பதவி வேட்டையையே குறியாகக்கொண்டும் எழுந்துள்ள இரு கருங்கற்பாறைகளின் மீதும், மோதிக் கொள்ளாமல் சுயராஜ்ய அரசு எனும் நாவையை வெற்றிகரமாகச் செலுத்த முடியும்."

இத்துணைக் கண்டத்திற்குப் புதிய நிலை ஆசியலில் கிடைத்திருக்கிறது என்பது உண்மையாகும். இந்த வரலாற்றில் இடம் பெற்றுவிட்டச் சம்பவத்தை, அரசியலில் அரிச்சுவடியும் அறியாதவர்களால் தான் புரிந்துகொள்ள முடியாது. ஒரு நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் இருந்து தீரவேண்டியது, எல்லா சீர்திருத்தங்களுக்கும் கட்டாயம் முன்னதாக இருந்துத் தீரவேண்டிய இன்றியமையாத ஒரு நல்வாய்ப்பாகும். அந்த நல்வாய்ப்புதான் காங்கிரசார் பதவி பெற்றிருப்பது. தங்கள் சுக வாழ்வை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியவர்கள் தாங்களேதான் என்னும் உயர்ந்த எண்ணத்தை அந்த நாட்டு மக்கள் உறுதியாகக் கொண்டிருக்க வேண்டியதும் முக்கியத்திலும் முக்கியமாகும். ஆட்சியிலே அமர்ந்திருப்பவர்களின் நல்லெண்ணத்தையும், இனிக்க இனிக்கப் பேசும் வார்த்தைகளையும், முன்னாள் அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் மட்டும் உறுதியாக நம்பிக்கொண்டு, ஆட்சிப் பீடத்திலிருந்து அவர்களால் இயற்றப்படும் சட்ட திட்டங்களால் தங்களுக்கு ஏற்படும் விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்க்காமல், செம்மறியாட்டு மந்தை போல இருக்கும் மக்கள் மனோபாவத்திற்கும், மக்களாட்சி முறைக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை உண்டு. முன்னாள் கொண்ட நம்பிக்கை நாசத்தின் தலைவாயிலேயன்றி, சுக வாழ்வின் சூட்சுமத்திறவுகோல் அல்ல. தியாகிகளுக்கு அவர்கள் புரிந்த தியாகம் ஒன்றையே பெரும் பொருட்டாக மதித்து பாராளும்பதவி கொடுப்பது மக்களாட்சி முறையாகாது. ஆளவந்தார்கள் எவ்வளவு தியாகம் செய்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு, நாம் மரியாதை காட்ட வேண்டியது நமக்குள்ள நீங்காக் கடமையாகும். மரியாதை காட்டுவதற்கும், அவர்களை ஆட்சி மன்றத்தில் அமரச் செய்வதற்கும் துளியும் சம்பந்தம் கிடையாது. அவர்கள் கொண்டிருக்கும் திட்டமென்ன, அந்தத்திட்டம் நாம் இதுவரை கனவு கண்டுக் கொண்டிருந்த லட்சியபுரிக்கு இட்டுச் செல்லுமா? அந்தத் திட்டத்தால் அது முடியாது என்றால், நமக்கு வாழ்வளிக்கும் வேறு திட்டத்தை மேற்கொள்ள அவர்கள் தயார் தானா? அவர்கள் அதற்கு முன் வரவில்லையானால் முன்னாள் அவர்கள் மீது கொண்டிருந்த பக்தி விசுவாசத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தகுந்தவர்களுக்கு முடி சூட்ட மக்கள் முன் வருவதுதான் மக்களாட்சிக் கோட்பாட்டின் மூல—முக்கிய உணர்ச்சியாகும். மேலும் மேலும் தியாகிகளின் அற்புதம் புரியும் ஆற்றலை நம்பிக் கொண்டிருக்கிற மக்கள், மக்கள் என்ற சிறந்த பெயருக்கே இழுக்குத் தேடுபவர்களாவர்.

இன்று நாட்டில் மக்களாட்சிக்குத் தேவைப்படும் அந்த மூல உணர்ச்சி, மக்களிடம் அரும்பெடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஏகாதிபத்தியம் அகன்றதும் ஏற்பட்ட காங்கிரஸ் தியாகிகளான ஆளவந்தார்கள் ஆட்சியிலே, மக்கள் பெற்றது வறுமை—பெற்று வருவதும் வறுமை—பெறப் போவதும் அதுவேதான் இதன் பலனாகக் கொஞ்சம் கொஞ்சம் அதிருப்தியும், ஆளவந்தார்கள் மீது அலட்சியமும், அவநம்பிக்கையும், மக்களிடம் தோன்ற ஆரம்பித்து இருக்கிறது. ஆட்சியைக் கைப்பற்றும் அளவிற்கு இந்தப் புத்துணர்ச்சி பெரும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த சிறு விழிப்புணர்ச்சியையும் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளும் சக்தி வாய்ந்த—தெளிவான திட்டங்களைக் கொண்ட—அரசியல் கட்சி அமைப்புகள் நன்கு உருவாகவில்லை இன்னும். எது எப்படி இருந்தாலும், ஆளவந்தார்கள் மீது, மக்கள் கொண்டு வரும் கசப்பு தினம் தினம் வளராத

[தொடர்ச்சி ...ம் பக்கம் பார்க்க]

## 'மாகாணத்தை அழிவுநோக்கி அழைத்துச் செல்லும் சட்டசபை'

## 'மக்கள் நம்பிக்கையிழந்த சபையைக் கலைத்துவிடுக'

### கிழக்குப் பஞ்சாப் எம். எல். ஏ. கூறுகிறார்!

கிழக்குப் பஞ்சாப் எம். எல். ஏ. வாகிய சர்தார் பக்கன்சிங் அ. இ. காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் தோழர் காளா வெங்கட்ராவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், கிழக்குப் பஞ்சாப் சட்டசபையிலிருந்து தான் ராஜிநாமா செய்து வெளியேற முடியாதென்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளாராம்.

சக்கார் மந்திரிசபை ராஜிநாமா செய்ததையொட்டி காங்கிரஸ் சட்டசபைக் கட்சியை விட்டு விலகிய நான்கு எம். எல். ஏ.க்களில் சர்தார் பக்கன்சிங் ஒருவராவார். காங்கிரஸ் சட்டசபைக் கட்சியை விட்டு விலகிவிட்டபடியால், எம். எல். ஏ. பதவியையும் விட்டுவிட வேண்டுமெனக் காங்கிரஸ் செயலாளர் காளா உத்திரவிட்டிருந்தார். 'முடியாது' என்று எம். எல். ஏ. கூறியிருக்கிறார்.

"கிழக்குப் பஞ்சாப் சட்டசபை பொது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டபடியாலும், மாகாணத்தை அது அழிவு நோக்கி அழைத்துச் செல்வதாலும்" சட்டசபையைக்கலைத்து விட வேண்டியது அவசியமென்றும் சர்தார் பக்கன்சிங் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## அவ்வளவு மோசமல்ல!

இரும்பு, எஃகு 'கோட்டா'த் தகராறு (லஞ்ச ஊழல்) வழக்குகள் மொத்தம் 74-ல் நான்கில் மட்டுமே காங்கிரஸ்காரர் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகிறதென்றும், இவ்வழக்குகள் பெரும்பாலனவற்றிலும் காங்கிரஸ்காரர்களே சம்பந்தப்பட்டுள்ளனரென்று தவறாகப் பலப்படப்பேசி வரப்படுகிறதென்றும் கிழக்குப் பஞ்சாப் பிரதமர் டாக்டர் கோபிசாந்த பார்காவா அண்மையில் வெளியிட்டார்.

## 'சமூக விரோதிகளிடம் காட்டிக்கொடாதீர்'!

### ஆந்திர மாகாணத் திணிப்புக்கு ராயலசீமை எதிர்ப்பு!

ஆந்திரமாகாண நிறுவனத்தை எதிர்த்தும் ராயலசீமை மாவட்டங்களை அமையவிருக்கும் ஆந்திர மாகாணத்தோடு இணைக்கும் முயற்சியைக் கண்டித்தும் ராயலசீமை மகாசபையின் நிர்வாகக் கமிட்டி 13-ந்தேதியன்று நிறைவேற்றியுள்ளது.

ஆந்திர மாகாணத்தோடு ராயலசீமையையும் இணைத்துவிட்டால், அதன் அவதி மேலும் பெருகவே ஏதுவாகுமென்றும், ராயலசீமை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்களும் முறிந்துபெருமென்றும் அத்தீர்மானம் மேலும் கூறுகிறது.

சென்னை மாகாணத்தைப் பிரிக்காமலே இப்படியே வைத்திருக்கலாமென்றும், மேற்படி கமிட்டி, காங்கிரஸ் காரியக் கமிட்டியையும், மத்திய சர்க்காரையும் கேட்டுக்கொண்டுள்ளது.

"இத்தகைய ஆட்சேபங்கள் கண்டனங்களை இன்னமும் பிறவற்றை வைக் காதில் போட்டுக்கொள்ளாமல், எங்கள் மீது ஆந்திர மாகாணம்—அதுவும், ராயலசீமை அடக்கப்பெற்றது—திணிக்கப்படுமேல், சமூக விரோதிகளிடமிருந்தும் பிற்போக்குச் சக்திகளிடமிருந்தும் போராடுவதையுமென இக்கமிட்டி அஞ்சுகிறது" என்று அத்தீர்மானம் குறிப்பிடுகிறது.

இக்கூட்டத்துக்குத் தோழர் சி. எல். நரசிம்மம் தலைமை தாங்கினார்; ராயலசீமை மாவட்டங்களின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர்.

## அண்டையில் பொருளிருந்தால் ஆண்டவனுக்கும் ஆபத்து!

### தங்கத்தகட்டால் பிள்ளையாருக்கு நேர்ந்த கதி!

"மடியிலே கனமிருந்தால் வழியிலே பயமிருக்கும்" என்று சொல்லப்படுவதுண்டு. இது மனிதர்களைப் பொருத்தவரையில் வழங்கப்படும் பழமொழி இதே போன்ற மற்றொரு பழமொழி நம்நாட்டு கடவுள் பற்றி சொல்லவேண்டுமானால் "அடியிலே பொருளிருந்தால் ஆண்டவனுக்கும் ஆபத்து" என்று தான் சொல்லவேண்டும். ஏன் இப்படி என்று கேட்கிறீர்களா? கேளுங்கள்; தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் தாலுக்காவில் உள்ள நெல்லிக்குப்பத்துக்கு ருகில் உள்ள சென்னப்ப நாய்க்கன் பாளையத்தில் பிள்ளையார் கோவிலிருந்த பிள்ளையார் விக்ரகத்தை யாரோ அப்புறப்படுத்திவிட்டு அதன் அடியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 31 வீராகன் மதிப்புள்ள தங்கத் தகட்டைத் திருடிக்கொண்டு போய் விட்டார்களாம். இந்த பிள்ளையார் அவ்வூரில் சக்திவாய்ந்த பிள்ளையாராம். அப்படியிருந்தும் அவரையே அப்புறப்படுத்தக்காரணமாயிருந்தது ஒரு தங்கத் தகடு என்றால் இதனை என்னவென்று சொல்லுவது? அடியிலே தங்கமிருந்ததனால்தான் அந்த ஆண்டவனுக்கும் ஆபத்து வந்தது! எனவே இனி மேல் நமது கடவுள்கள் கூட தனியுடைமையாளராக இல்லாமல் தம்மிடமுள்ள தங்கம், வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருட்களை மக்களுக்குப் பொதுவுடைமையாக்கிவிடும்படி தமது பக்த கோடிகளின் கனவில் தோன்றி சட்டளை பிறப்பிப்பார்களாக!

# மாலை மணி

சென்னை 15—11—49 செவ்வாய்க்கிழமை


## டாலர் உதவி செய்கிறது!

சீனாவின் பெரும்பகுதி சிவப்பாகிப்போயிருக்கிறது. மீதமுள்ள நிலப்பரப்பும் சிவப்பாவது நாள் கணக்கில் இருக்கிறதேயன்றி, மாதக் கணக்கில் இல்லை. கோமிண்டாங் கட்சிக்குள்ளாகவே குத்தும்வெட்டும்நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. சியாங்கேஷேக் ஜீவநாடி தளர்ந்துபோய் மேலும் கொஞ்சகாலத்திற்கு உயிர்வாழ, புகலிடம் தேட வேண்டிய நிலையில் திக்குமுக்காடிக்கொண்டு இருக்கிறார். கோமிண்டாங் கட்சியைப் போற்றிப் புகழ்ந்தவர்கள்தான் சீன மக்கள். தங்களுக்குப் புது வாழ்வளிக்கும், பேராற்றல் பெற்றுள்ள கட்சி அது ஒன்றுதான் என்ற திடமான நம்பிக்கையோடுதான், சீன மக்கள், அந்தக் கட்சியைக் கட்டிக்காத்து வந்தார்கள். சியாங்கேஷேக்கையும், தங்களுடையவறுமையைப்போக்கி, இல்லாமையைத் தொலைத்து, தங்களுக்கு நல்வாழ்வைத் தேடித் தரும் தனித் தலைவர் என்றுதான் சீன மக்கள், ஆரம்ப முதல் அவருக்கு அமோகமான ஆதரவைக் காட்டிவந்தனர்.

கோமிண்டாங், தான் கொண்டிருந்த எந்த ஒரு கோட்பாட்டையும் நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபடவே இல்லை. கூறிவந்த இலட்சியங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொலை செய்து வருவதையே சிறந்த கடமையாகக் கொண்டுவிட்டது காலப்போக்கில் கோமிண்டாங். பொது மக்களின் இருதய ஒலியின் இருப்பிடமாக இருந்த கட்சி, ஏழை மக்களைச் சுரண்டி வாழும் கோட்டான்கள் சில தங்கும் கூடாரமாக மாறிவிட்டது. புரட்சிப் புயலாக இருந்த கோமிண்டாங் புல்லர்களின் புகலிடமாகக் காட்சியளிக்கும் கேவலத் தன்மையைப் பெற்றுவிட்டது.

சியாங்கேஷேக்கும், சீனப் பொது மக்களின் பாதுகாவலரென பகட்டாகக் கூறிவந்தவர், சீனப் பணமுட்டைகளின் பாதுகாப்பாளராக மாறிவிட்டார் பதவியில் அமர்ந்ததும். சீன மக்களின் தினசரி வாழ்க்கையைச் சீரழித்துவரும் சீனபணமுட்டைகளின எடுபிடியாக சியாங் காட்சியளிக்கத் தொடங்கினதும், சீன மக்களும், தங்கள் இருதயத்தில் வைத்துப் பூஜித்து வந்த சியாங்கை, விரட்டியடித்துவிட்டனர். சியாங்கிற்கும், சீனப் பொது மக்களுக்கும் இடையில் நேர் செய்ய முடியாத அளவில் பெரும் பள்ளம் விழுந்துவிட்டது. பொது மக்களின் ஆதரவை இழந்துவிட்டு, அவர்களின் எழுச்சியை அடக்கி, அவர்கள் குருதியால் மண்ணை நனைத்து, ஆட்சிப் பீடத்தில் நிலையாக அமர்ந்திருக்கி சியாங்கேஷேக் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன சீன மக்களால்.

சீன மக்களின் சீற்றத்திற்கு ஆளாகிவிட்ட சியாங், திருந்தி நல் வழிப்படுவதற்கான சந்தர்ப்பங்கள்பலவற்றைச்சீனமக்கள் அளித்துப்பார்த்தார்கள். அந்த அரிய வாய்ப்புகளனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, தம்மைத் தாமே திருத்திக்கொள்ள சியாங் முன் வரவே இல்லை. எழுந்தது பொது மக்கள் புரட்சி. ஒடு துளியும் மதிப்பளிக்காத மதோன்மத்தரான சியாங்கிற்கு, அவர் எந்த முறையில் அறிவித்தால் புரிந்துகொள்ளுவாரோ, அந்த முறையால் பதில் அளிக்க சீன மக்கள் முன்வந்தனர். இந்தச் சூழ்நிலையின் இடையிலாவது, சுயநலத்தைச் சிறிதளவு மறந்திருந்தாலும் கூட, சீன மக்களின் முழு கோபத்திற்கும் சியாங் இலக்காகி இருந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. ஓரளவு புகழும், அமைதியான வாழ்வும், மன நிம்மதியும் இன்று சியாங்கிற்கு மிச்சமாகி இருக்கும். சியாங் தவறிவிட்டார்!

சியாங்கிற்கும் சீன மக்களுக்கும் இருந்துவந்த நல்ல உறவின் நடுவில் புகுந்து அமெரிக்க டாலர் நர்த்தனம் புரியத் தொடங்கியது. சியாங் சீன மக்களின் வைரியானார். சொந்த வாழ்வை நிலைநிறுத்திக்கொள்ளும் சர்வாதிகாரியானார். எல்லாத் தூயப் பண்புகளும் அவர் ஆட்சியில் இருந்து அகன்றுவிட்டன அதிக்கிரமத்தின் இருப்பிடமானார் சியாங்.

சியாங்கின் சர்வாதிகாரம் சரிய ஆரம்பித்ததும், டாலரின் கண்டனமும், கேலியும் கிளம்பத்தொடங்கின. தோல்விமேல் தோல்வி சியாங்கிற்கு. வெற்றி மேல் வெற்றி சீன மக்களுக்கு. இது வரலாறு, டாலரால் மறைக்க—மறுக்க முடியாது.

இவ்வளவிற்கும் பிறகு சியாங் கும்பலைக் குறித்து, அமெரிக்க மேஜர் ஜெனரல் கிளேயர் ஷெனால்ட் புகழ்கிறார். சீன மக்கள் கம்யூனிசத்தை விரும்பவில்லையாம்! சீன பொது மக்கள் புரட்சியைச் செய்யவில்லையாம்! சியாங்கிற்கு, போர்க்கருவிகள், குண்டு, வெடி மருந்து, துப்பாக்கி, பீரங்கி, விமானம், பணம் இவ்வளவும் கொடுத்து உதவ வேண்டுமாம் அமெரிக்கா! இந்த முறையால் சீன மக்கள் வாழ்வுபெற, தொண்ணூற்றாறு கோடி ரூபாய்க்குத் தளவாடங்களை அமெரிக்கா சியாங்கிற்கு உதவ முன்வர வேண்டுமாம்! மேஜர் ஜெனரலின் உருக்கமான வேண்டுகோள்!

டாலர் வருகிறது! துப்பாக்கியாக! வெடிமருந்தாக! ஆகாய விமானமாக! சீன மக்கள் விரும்பும் சீர் இது தானோ! டாலர் உதவியின் தன்மைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு! இதுமட்டும், சீன மக்கள் விரும்பும் பெரும் புரட்சி போதும்!

## வைத்தியத் துறையிலுமா வடமொழித் தொல்லை?

இந்திய வைத்திய கல்லூரியில் தமிழ் ஆயுர்வேதவகுப்பு என்றும், தெலுங்கு ஆயுர்வேத வகுப்பு என்றும் இரண்டுவித வகுப்புகள் நடத்தப் படுகின்றன. இதனால் அரசியலாருக்கு அதிகச்செலவும், பாடம் போதிக்கும் முறையில் வீணான சிரமங்களும் ஏற்படுகிறது. எனவே, இவ்விரு வகுப்புகளையும் ஒன்றாக இணைத்து ஆங்கிலத்தைப் பொது மொழியாகக் கொண்டு பாடபோதனை செய்ய வேண்டும் என்று அண்மையில் சென்னை அரசியலார் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர். அரசியலாரின் இந்த ஏற்பாடு வரவேற்கத்தக்கதேபொதுவாகஇந்திய மருத்துவக்கல்லூரியில் ஆயுர்வேத மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு வடமொழியும் பயில வேண்டிய தொல்லை நெடுநாட்களாக இருந்துவருகிறது. இதற்குக்காரணம் பல ஆயுர்வேத நூல்கள் வடமொழியில் உள்ளன என்று சொல்லப்படுகிறது. இதற்காக, இறந்தொழிந்தொழிந்து வழக்கிலில்லாத ஒரு மொழியை மாணவர்கள் கற்கவேண்டும் என்பது பொருந்தாக்கூற்றேயாகும். மாணவர்களுக்கு வேண்டியது பொருள்விளக்கமேயன்றி, மொழியல்ல. எனவே, புரியாத அம்மொழியிலுள்ள பாடங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அதனைப்பாடமாக வைத்தல் பல வழிகளிலும் பயன் தர வல்லது ஆங்கிலம் சர்வதேசமொழி அதனைப்பயன் படுத்துவதை விடுத்து வட மொழிக்கு ஆக்கம் தேடுவது, அல்லது மதிப்பு தருவது என்ற ஒரே காரணத்துக்காகப் பொழுதையும், பொருளையும் வீணாக்குவது சரியல்ல. இந்தப்பாழும் வடமொழிப் பற்று வைத்தியத் துறையிலும் எப்படிப்புகுந்ததோ தெரியவில்லை! சரி, போனது போகட்டும், இனியேனும் மருத்துவ மாணவர்கள் வடமொழி பயிலச் செய்யும் வீண் தொல்லையிலிருந்து விலக்கப் படுவார்கள் என்று நம்புகிறோம்.

## சூறாவளியை எதிர்க்கும்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வண்ணம் இருக்கிறது என்பதை, ஆளவந்தார்களின் கட்சியினரே கூட மறுக்கமுன்வரமாட்டார்கள்.

இதற்குள்ளாகவே, அகில இந்திய ஹிந்து மகாசபையின் சென்னைக்கிளையின் முன்னாள் தலைவராக இருந்த கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார் கலங்குகிறார்—கதறுகிறார்- காங்கிரஸ் 'கப்பலி'லே இடமும் தேடிக்கொள்ளுகிறார்! காங்கிரசிலே அவர் சேர்ந்துகொள்வதற்கு இவ்வளவு அவசரம், அவர் கொண்டிருக்கத் தேவையில்லை. இன்னும் சிலநாள் வரை, அவர் பொருத்திருந்தால், கண்டிப்பாகக் காங்கிரசே, அவரை, தமது முகாமில் சேரும்படி அவருக்கு ஸ்ரீமுகம் அனுப்பியிருக்கும்!

ஆர் எஸ். எஸ் கோல்வால்கர், காங்கிரசில் சேர்ந்து கொள்ளுகிறேன் என் சங்கத்தோடு என்று ஜாடை மாடையாகக்கூட ஒரு வார்த்தை கூறாது முன்பே, வேறு யாரோ ஒரு காங்கிரஸ் முக்கியஸ்தர் கேட்டுக் கொண்டார் என்பதற்காக, ஆர். எஸ். எஸ். கூட்டத்தை அணைத்து உச்சிமோந்து மகிழ்ச்சி கொள்ள தீர்மானித்து விடவில்லையா காங்கிரஸ் 'மகாசபை'! ஆர் எஸ். எஸ். கும்பலுக்குப் பலாத்காரம் ஜன்மத்தோடு உடன் பிறந்ததாகும். இது நமது கூற்றுஅல்ல, ஏற்கனவே காங்கிரஸ் ஆளவந்தார் புரிந்து வந்த அஷ்டோத்தர அர்ச்சனை இதுதான்!

சாஸ்திரியார்தான் சேர்ந்துகொண்டாரே காங்கிரசில. ஏதோ சல சலப்புச் செய்யாமல் சேர்ந்திருக்கக் கூடாதா? அவர்? வலதுசாரிகளின் ஆதிக்கம் வளருகிறதாம்! அவர்கள் நாத்திகர்களாம்! முற்போக்குக் கொள்கையினருக்கு, சாஸ்திரியார் தரும் சாபம் இது! தேசியத்திலே அகிம்சை, சத்தியம் பிரிக்க முடியாமல் இரண்டும் ஒன்றாய்க் கலந்துபோயிருக்கிறதாம். வருணாஸ்ரமத்திலே நம்பிக்கையுடையவர். இந்தக் கலியுக விஸ்வாமித்திரர் காங்கிரசில் சேராததற்கு முன்பே, காங்கிரஸ் கட்சி, இந்தச் சனாதன சாஸ்திரியாரின் கூட்டுறவை நம்பிவாழும் கூட்டத்தை அமைத்துவிட்டது என்பதை, சிக்கற சாஸ்திரியார் தெரிந்துகொண்ட காரணத்தால்தான், ஹிந்து மதக் காப்பாளர் இடந்தேடிக் கொண்டார் காங்கிரசில்!

பிறப்பிலே உயர்வு தாழ்வு பேசுவது, மனுநீதியின் உணர்ச்சியை தேசிய உடலில் புகுத்தி மக்கள் வாழ்வைக் கெடுப்பது, மாயாவாதம் பேசி மக்களின் விழிப்புணர்ச்சியைக் குலைப்பது போன்ற பணியாற்ற ஆளவந்தார்களுக்கு அருந்துணைத் தேவையாகிறது, இந்த நெருக்கடியான கட்டத்தில். சாஸ்திரியாரின் சனாதனத்தொண்டு நல்ல பலன் கொடுக்கும் இதற்கு!

'வேதியராயினும் ஒன்றே வேறு குலத்தவராயினும் ஒன்றே' என்ற பாரதியார் பாட்டின் உயர்கருத்தைக் கண்டு கோபிக்கிறார் சாஸ்திரியார், என்று தீர்மானிக்கிறோம், நாமும் பிறப்பிலே உயர்வு தாழ்வு பேசும் பித்தலாட்டம் தொலைய வேண்டும் என்று. கோட்பாடு கொண்டிருப்பதால். சமத்துவம் பேசுவது அவருக்கு வகுப்புவாதமாகிறது! அதற்காக உழைப்பது. சுயநல வேட்டையாகிறது! என்ன செய்வார் சாஸ்திரியார்? கால வேகத்தைக் காண மறுக்கிறார், தம் மண்டையிலே மாறாக் கருத்துக்கள் மறைந்துகொண்டு கிடப்பதால்!

பிறர் உழைப்பில் வாழும் பயிற்சிபெற்றுள்ளோர்—தர்மத்தின் பெயர் கூறி மக்கள் துயரைப் பெருக்குவோர்—புகலிடமாகிவிட்டது காங்கிரஸ். சாஸ்திரியாரின் காங்கிரஸ் பிரவேசத்தில் மறைந்திருக்கும் உண்மை இதுதான்!

சமதர்மச்சூறாவளியைச்சனாதனச் சருகுகொண்டு அடுக்கி நிறுத்தப்போகிறாராம்! அனுபவம், சாஸ்திரியாரின் முயற்சிக்கு எதிராக இருக்கிறது! சாஸ்திரியார்கள் சரிந்த கதைகளை எடுத்துக்காட்டிக் கொண்டு இருப்பதுதான், கே. எஸ் ராமசாமி சாஸ்திரியாரின் கதறல்!

## "உடுமலை பீரங்கி" வழக்கு

'உடுமலை பீரங்கி'மீது அரசியலாரால் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு 14—12—49 க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

## அப்பீல் செய்துகொள்ள அனுமதி இல்லையாம்!

### சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு

மக்களாட்சி என்று சொல்லப்படும் காங்கிரஸ் ஆட்சியில் மக்களின் உரிமைக்கு எந்த அளவு மரியாதை கிடைக்கிறது என்பதைப் பாருங்கள்! நீதி வழங்கும் நீதி மன்றத்தின் உரிமையே அவசரச் சட்டங்களால் பறிக்கப்படுகிறது. பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டோர்க்கு நீதி கிடைக்கும் என்று நினைப்பதற்கு இடமில்லை. மாகாண அரசியலார் மனது வைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைதான் காணப்படுகிறது.

பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டோர் ஹேபியஸ் கார்ப்பஸ் மனு செய்து கொள்வதன் மூலம் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. அப்படி அந்த ஹேபியஸ் கார்ப்பஸ் மனு நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டால், பெடரல் கோர்ட்டிடம் முறையிட்டுக் கொள்வதுண்டு. இங்ஙனம் ஒரு நீதி மன்றத்தைத் தாண்டி மற்றொரு உயர் நீதி மன்றத்திடம் முறையிட்டுக் கொள்ள மக்களுக்கு வசதியளிப்பதுதான், முறையும் நீதி மன்றங்களின் கடமையுமாகும்.

ஆனால், தற்போதுள்ள நிலைமையில் இந்தப்பொது நீதி கூட புறக்கணிக்கப்படுகிறது என்று மக்கள் நினைக்க வேண்டிய கட்டத்திலிருக்கின்றனர். ஏனெனில் அண்மையில் சென்னை உயர் நீதி மன்றத்தில் 27 ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்கள் சம்பந்தமாக அப்பீல் செய்து கொள்ள அனுமதி கோரப்பட்டது. இந்த 27 மனுக்களையும், நீதிபதிகள் சத்தியநாராயணராவும், பஷீர் அகமது சையதும் விசாரித்து 19 மனுக்களை அனுமதித்து மனுதாரர்களை விடுதலை செய்தனர். 8 ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்களை நிராகரித்தனர். 19 மனுக்கள் சம்பந்தமான தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்ய அரசாங்கத்தாரும், 8 மனுக்கள் சம்பந்தமாக அப்பீல்செய்ய பாதுகாப்புக் கைதிகள் சார்பிலும் அனுமதி கோரப்பட்டது. இவ்விரு விஷயத்திலும் அப்பீல் செய்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஜனநாயகம் தழைப்பது எங்ஙனம்!

# அறிவுப்புரட்சி-பொருளாதார சமத்துவம் -ஜனநாயக ஆட்சி விழைகிறது கழகம்

## மொழியுணர்வுற்று இனவழியுணர்ந்து திராவிடக் கூட்டாட்சி நிறுவுவோம் வாரீர்!

### வடவர் ஆதிக்கம் வளரவிடல் பெருந் தீது

### திருவள்ளூரில் நெடுஞ்செழியன் - காஞ்சி. கல்யாணசுந்தரம்

திருவள்ளூர். நவ. 7— 6—11—49 ஞாயிறு மாலை திருவள்ளூர் கிராமணியார் சத்திரத்தில் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. காலையிலிருந்தே சுற்றுப்புற கிராமங்களிலிருந்து கழக ஆதரவாளர்கள் வந்து குழுமியிருந்தனர். கடம்பத்தூர், திருப்பாசூர், பாண்டூர், ஈக்காடு, பெரிய குப்பம் முதலிய ஊர்களிலிருந்து கழகத் தோழர் அணியணியாக வந்த வண்ணமிருந்தனர். பொதுக் கூட்ட மேடையில் இரு வண்ணக் கொடிகள் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. காஞ்சி மாடர்ன் ரேடியோ ஸர்வீஸ் காரர்களால் ஒலிபெருக்கி அமைக்கப் பட்டிருந்தது. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சத்திரத்திற்குள்ளும், அருகிலுள்ள குளக்கரைப் படிக்கட்டிலும் அமர்ந்து சொற்பொழிவுகளை உருக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

விழா மாலை 5 மணிக்குத் துவங்கப்பட்டது. தோழர் தினதயாளன் இயக்கப் பாடல்கள் இசைத்தார். தோழர் ரத்தினம் அனைவரையும் வரவேற்று, தோழர் முத்து (சென்னை சுயமரியாதைச் சங்க உறுப்பினர்) அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். தோழர் ஏ. அமுது அதை ஆதரித்தார். பின்னர் தோழர் முத்து அவர்கள் தலைமையேற்று, திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பட்டதின் தன்மையினை விளக்கி, பெரியாரிடமிருந்து நாம் பெற்ற கொள்கை நலனைப் போற்றி, அவரின் இறுதிச் செயல் கண்டிக்கத்தக்கதைப் பற்றியும் எடுத்துக் கூறி, அதனால் நாம் பிரிந்து செயலாற்ற முன் வந்தது பற்றியும் எடுத்துக் கூறி பின்னர் தி. மு. கழகக் கொடியை நீண்ட கைதட்டலுக்கிடையே ஏற்றி வைத்தார்.

பிறகு தோழர் அமுது அவர்கள், நமது கழக நிலை பற்றியும், பெரியாரின் தற்கால நிலைபற்றியும் சிறிது நேரம் பேசினார்.

**காஞ்சி. கல்யாணசுந்தரம்**

இரண்டாவதாக தோழர் காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் நாட்டின் அறியாமைக்கு சாவுமணி அடிக்கவும், பாட்டாளி மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைக்கு ஏற்றமளித்திடும் பண்பு பெறும் நிலையையும், வடநாட்டுச் சுரண்டலை பற்றியும், நமது மந்திரிகளின் தினசரிப் பிரயாண, பிரசாரத்தைப் பற்றியும் அவர்கள் நடந்துகொள்ளும் போக்கு பற்றியும்—ஜனநாயக மற்ற போக்கினைப பற்றியும், பண்டித நேரு அமெரிக்காவில் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றியும் எடுத்துக் கூறி. நமது நிலையைச் சரிபடுத்த தி. மு. கழகத்தில் சேர அனைவரையும் கேட்டுக்கொண்டு முடித்தார்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் பேச ஆரம்பித்தார்.

**இரா. நெடுஞ்செழியன்**

திராவிட முன்னேற்றக் கழகம், சமுதாயத்தில் அறிவுப் புரட்சி, பொருளாதார சமத்துவம், ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு— திரிசூலமென ஏந்தி கொண்டாற்ற முன் வந்திருக்கிறது. அரசியல்விடுதலைக்குப்பின்ன சமூகச் சீர்திருத்தப் பணியினை மேற்கொள்ள வேண்டிய தேசிய காங்கிரஸ் இன்று கட்சிப் பிரசாரம் செய்யவும் அதற்கு மந்திரிமார்கள் தங்கள் வேலைகளையும் ஒத்தி வைத்துவிட்டு ஊர்ப்பயணம் செல்லவுமான நிலை கண்டிக்கத்தக்கது. கட்சிப் பிரசாரம் செய்ய அல்ல மந்திரிகள் சம்பளம் பெறுவது—பதவி ஏற்றது. தங்கள் கட்சிக்குப் பணபலம், படை பலம், பதவிபலம், பத்திரிகை பலம் ஆகியனாவும் இருந்தும் வளராத ஒரு கட்சிக்கு, மந்திரிகள் தங்கள் வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டுகட்சிப்பிரசாரத்திற்குச் செல்வது ஜனநாயகத்திற்கு உகந்ததாகாது.

த. நா. க. கா. தலைவர் காமராஜர் போகின்ற இடத்திலெல்லாம் மாற்றுக் கட்சிகளை ஒடுக்குவதிலேயே முழு கவனமும் செலுத்தி வருகின்றார். அவரும் ஒரு சட்டசபை அங்கத்தினர். மூன்று வருடத்துத் தினசரிச் செய்தித்தாட்களைப் புரட்டிப் பாருங்கள். அவர் ஒரு வார்த்தையாவது பேசியிருக்கிறாரா என்று. இல்லை. இன்றுமக்களுடைய-மக்களுக்காக ஆளுகின்ற அமைச்சர்கள் உட்பட கட்சிப் பிரசாரத்துக்காக உதவுவதற்கு வருகின்றார்களே ஒழிய, மக்களின் கஷ்ட நஷ்டங்களை யறிய அவர்களுக்கு வாய்ப்பில்லை.

**சூதாட்டக் காய்களா, பதவிகள்?**

அண்மையில் செகரிடேரியட் உத்தியோகத்தினர் இலக்கியக் கழகத்தில் பேசிய திரு. லோபோ அவர்கள் கூட சொல்லி இருக்கிறார்கள். இந்த காங்கிரஸ் மந்திரிகள் அனுபவமில்லாதவர்கள் என்று. அதை நிரூபித்துக் காட்டுவதிலே மிக அக்கரை காட்டுகின்றார் நமது மந்திரிமார்கள். (சிரிப்பு)

இன்று மந்திரிகள் தங்கள் பதவியை அரசியல் சூதாட்டக் காய்களாகக் கருதுகிறார்களே ஒழிய, அவர்களுக்குப் பயிற்சி பெறும் நோக்கமில்லை. பயிற்சி பெற வேண்டும் அவர்கள் உதாரணமாக, சென்னை நகரம் பல்ல யிரக்கணக்கான மக்களைக் கொண்டது, பெரும் மக்கள் பொழுதுபோக்காகச் சென்று இளைப்பாறுதற்கு இருந்த பெரும் மைதானமான ஜிம்கானா மைதானத்தில் இன்று காய்கறி பயிரிடுகிறார்கள். யாரைக்கொண்டு என்றால் இராணுவத்தைக் கொண்டு. இதற்குப் பெயர் உணவுப் பொருள் பெருக்கத் திட்டம் என்கிறார்கள். நீங்கள் தினசரிப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் தெரியும் படத்துடன், கவர்னர்-ஜனரல் ராஜகோபாலாச்சாரியார் வயலை உழுவதுபோல, பண்டித நேரு அவர்கள் ட்ராக்டர் ஓட்டுவதுபோல. இவர்கள் இவைகளையே தொழிலாகக் கொண்டவர்களானால் அது பற்றி நமக்கிகு கவலையில்லை. இவைகளைப்பற்றி மக்களிடத்தில் விளம்பரம் தேடுவதற்கே முழு நோத்தையும் செலவிட முனைதலும், பெருமை தேடும் பிரசாரம புரிதலும் நாம் கண்டிக்கவேண்டி நேரிடுகிறது.

**மது ஒழிந்தபின்னும்...!**

நமதுமாகாணத்தில்மதுவை எடுத்துவிட்டார்கள். மது விலக்கை நாம் வரவேற்கிறோம். மதுவிலக்குச் செய்த பின்னரும் அதுபற்றி, மது விலக்குப் பிரசாரம். செய்யலாமா? மக்கள் கேட்கமாட்டார்களா? மதுதான் எடுத்துவிட்டீர்களே, பிறகு குடிக்காதேஎன்றுகூறுகின்றீர்களே, எங்கே இருக்கிறது கள்ளுக்கடைகள்என்று. (சிரிப்பு) இப்படியாக நிர்வாகம் இருந்தால் மதுவிலக்கு ஏன் தோல்வியடையாது?

மதுவிலக்கால்நாட்டுக்கு $17\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்படுகிறது விற்பனை வரி மூலம் 25 கோடி ரூபாய் லாபம் ஏற்படுகிறது. நமது மாகாணத் தேவைகளைக் கேட்டால் பணமில்லை என்கிறார் கோபால் (ரெட்டியார்) நமது நாட்டில் இருந்து ரயில்கள் மூலமும். வருமான வரி, தீப்பெட்டிவரி, புகையிலை வரி, தேயிலை வரி, தோல் மூலம் வரி ஆகியவைகளால் அதிகப்படியான வருமானம் அரசாங்கத்துக்குச் சேருகின்றது. அவை அனைத்தும் மத்திய அரசாங்கத்திற்கே செல்கிறது ஆனால் நமது வசதிகளுக்குப் பணம் செலவழிக்க, பாதைபோட, விவசாயக் கருவிகளை வருவித்துத்தர ஆலைகள் அமைக்க நமக்குவழி கிடையாது, வக்குகிடையாது, என்று கூறுகிறார் நிதி அமைச்சர். மேலும் வரிகள் போட எண்ணியவர்ளேன் என்றும் கூறியவண்ணம் இருக்கின்றார். நமதுநாடுவிவசாய நாடாகவே ஆக்கப்பட்டாலும் நமக்கு வேண்டியவைகளை அரசாங்கம் காட்டவில்லை வடநாடு என்றால், அது தொழிற்சாலைகள் உள்ள நாடாக முயற்சிக்கப்பட்டு இயங்கி வருகின்றது அங்கு உற்பத்தியாகும் பொருள்களுக்கு நமது நாடு சந்தைக்களமாக — மார்க்கட்டாக ஆக்கப்பட்டுவிட்டது.

**அனைத்தும் வடவர் மயம்!**

நமதுநாடு ஏழ்மை நாடு என்றுகூறப்படுகிறது. ஆனால் வட நாட்டு அகதிகள் இங்கு தங்குவதற்கு வசதி அளிக்கிறது நமது அரசாங்கம். நமது நாட்டிலிருந்து வெளி நாடு சென்று வறியவராய் வந்தாலும் வசதிசெய்து கொடுக்க முனையவில்லை நமது அரசாங்கம். அண்மையில்; போரின் போது இந்தியாவில் முதல் தரமான ஆவடி டிபோவில் 50 ஆயிரம் பேர் வேலைசெய்து வந்தார்கள். இது 6 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது 45 ஆயிரம் டெக்னிஷயன்கள் பயின்றார்கள். ஆனால் இன்று அவர்களுக்கு வேலையில்லை. 5 ஆயிரம் பேர்களைத்தான் வேலையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், இதனை பலதேவ்சிங்கின உறவினர்கள் மேற்பார்வை யிடுகின்றார்கள்.

இன்று எதற்கெடுத்தாலும் வட நாட்டார் மயமாகவே காணப்படுகின்றார்கள். ஜவுளிக் கென்றாலும், செருப்புக்கு என்றாலும், இரும்புக் கென்றாலும், நகைக்கென்றாலும், மருந்து ஆக எதற்கெடுத்தாலும் வடநாட்டார் ஆதிக்கமாகவே காண்கிறோம்.

**தனிநாடு கோரிக்கை**

மற்றும், நமது சமுதாயத்தில் ஒருவனுக்கு மற்றவன் தாழ்ந்தவன்; தீண்டாதவன் என்ற பேதம், சின்னத்தின் மூலமும். உடை மூலமும் வித்தியாசம் நீக்கப்பட்டுஅனைவரும் சமம், மனிதன் மனிதனுக்குச் சமானமானவனே ஒழிய பேதம் கூடாது, புராண நம்பிக்கைகளை ஒழித்து, மத மூட நம்பிக்கை போக்கி, யாவரும் மனிதரே என்ற தன்மையில் வாழ்வதற்கு நாம் திராவிடர் என்று இனவழி உணர்ந்து மொழி உணர்ச்சி பெற்று திராவிடப் பிரிவினை பெறவேண்டும்-திராவிடநாடு திராவிடருக்கே ஆக்கப்படல் வேண்டும்மாற்று கட்சிக்காரர்கள் நாம் கேட்பது பாரத மாதாவை :வெட்டுவதாகும் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். பாகிஸ்தான் பெற்றது பாரதமாதா வெட்டுண்ட பின்னரல்லவா? நமது நாடுகூட இன்று பல பகுதிகளைக் கொண்டே ஆளப்படுகிறதே ஒழிய, ஒரே ஆட்சியாக அல்ல. இமயமலையில் வெற்றிக் கொடியினை நாட்டினர் நமது வீர . டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர், மூகலாயர் ஆகியவர் வருவதற்கு முன்னரும் நமது திராவிடம் தனித்திருந்தது.

**வரலாற்றைப் புரட்டுங்கள்!**

சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். அசோகர் ஆட்சியிலும் ஹர்ஷன் ஆட்சி பின்போதும், அக்பர் ஆண்ட போதும்கூட நமது நாடு தனித்தே இருந்து எழிலுடன் விளங்கியது. ஆனால் இந்தியாவோ என்றால், பலபேர்களுடைய படையெடுப்புகளை மேற்கொண்டு தளர்ந்திருந்தது. இந்தியா, ஒரே ஆட்சியில் இருந்தது கிடையாது. ஆங்கிலேயர் ஆண்டபோது கூட இந்தியா என்கின்ற பாரதமாதா தன் உடம்பில் 562 சுதேச சமஸ்தானங்கள் என்கின்ற 562 விஷ ஈக்கள் உலவும் புண்களைக்கொண்டே இருந்தாள்.

பாரதமாதாவின் உருவம் 1936ல் பர்மாவரை பரவியிருந்தது முந்தானை வடிவில். 1947-ல் பாரதமாதாவின் உடல் வெட்டப்பட்டு விட்டது, பாகிஸ்தான் என்றகத்தி மூலம். பாகிஸ்தான் பகற்கனவு என்றவர்கள். வாயடைத்துப் போய்விட்டார்கள். பாகிஸ்தான் ஏற்பட்டது பற்றிய காரணங்களுக்குப் பலமடங்கு காரணங்களையும், அவசியங்களையும் உள்ளடக்கிய நமது திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினை இலேசானது. எளிதில் சுமுகத்திற்கு வழி செய்யக் கூடியது. ஜப்பான், ஆலண்டு போர்ச்சுக்கல். பிரான்ஸ், சுவிட்சலாந்து ஆகிய சிறு சிறு நாடுகள் எல்லாம் தனித்து வாழும் போது $4\frac{1}{2}$ கோடி மக்கள் கூடிய நாம இந்த மாநிலத்தில் ஏன் தனித்து வாழமுடியாது?

**எல்லாமுண்டு இங்கு?**

எல்லாமுண்டு இங்கு. வளமுண்டு. வகையான ஆறுகள் பாய்கின்றன. காடுகள் உண்டு, துறைமுகங்கள் உண்டு. இயற்கையெழும் எல்லாப் பொருளும் உண்டு இங்கு, தங்கம் விளையும் நாடு இது. நிலக்கரி, இரும்பு. இயூரேனியம், பாஸ்பேட் முதலிய பொருள்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார். ஆனால் நமது அரசாங்கம் இதற்கு வழி செய்யுமா? செய்தால் நிறைந்த பலன் பெறலாம். ஆக திராவிட நாடு திராவிடர்க்கானால் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசுவோர் தங்கள் மொழி வழி அமைத்து அவையனைத்தும் சேர்ந்த ஒரு கூட்டாட்சிக்கு வழி செய்வோம் வாரீர்," என்று பேசினார்.

பின்னர், நேரு அமெரிக்கப் பயணம் பற்றியும், தீபாவளி பற்றியும் பேசி முடித்த பின்னர், கூட்டத்தில் கேட்ட 5 கேள்விகட்கு ஆணித்தரமான பதிலுரைத்த பின்னர், செயலாளர் தோழர் ரத்தினம் நன்றி நவில, விழா இரவு 8-50 மணிக்கு முடிவு பெற்றது. (வி-உ)

---

## அக்கரைக்கு இக்கரைப்பச்சை?

திருவனந்தபுரம்வட திருவாங்கூரைச் சேர்ந்த கவியூரில் கடந்த 11-ந்தேதி மன்று தாழ்த்தப்பட்ட வகுப்பு கிறிஸ்துவர்கள் இரண்டாயிரம் பேர் மீண்டும் இந்து மதத்தினராக்கப்பட்டனர், இம்மத மாற்றும் 'விழா' உன்னூர்க் கோயிலொன்றில் நடை பெற்றது. இவ்விழாவுக்கு வட இந்தியாவிலிருந்தெல்லாம் இந்து மதத்தலைவர்கள் வந்திருந்தார்களாம். மேலும் இரண்டாயிரம் பேர் தொடர்ந்து மதம் மாற்றப்படுவரெனத் தெரிகிறது.

# அணுசக்தி கட்டுப்பாட்டின் அந்தரங்கமென்ன?

## மேற்கத்திய நாடுகளின் உள்ளக் கிடக்கையை அம்பலப்படுத்துகிருர் தோழர் விஷன்ஸ்கி!

"அணுக்குண்டுகளின் உற்பத்தியைப் பெருக்குவது ரஷ்யாவின் நோக்கமல்ல. அதிக அணுக்குண்டுகள் தேவை என்ற நிலை ஏற்பட்டால், எவ்வளவு அவசியமோ அவ்வளவு அணு குண்டுகளை மாத்திரமே நாங்கள் தயார் செய்வோம். இப்பொழுது ஆக்க வேலைகளுக்காகவே அணு சக்தியை நாங்கள் பயன்படுத்தி வருகிருேம். இவ்விஷயத்தில் எங்கள் தேசத்திற்கு நாங்களே எஜமானர்கள். எனவே, இது சம்பந்தமாக சர்வதேசக் கட்டுப்பாடு ஸ்தாபனம் எதற்கும் நாங்கள் கட்டுப்பட முடியாது."

என்று ரஷிய அயல் நாட்டு அமைச்சர் தோழர் விஷன்ஸ்கி ஐக்கிய நாடுகள் விசேஷ அரசியற் குழுவில் பேசிய போது குறிப்பிட்டிருக்கிருர்.

அணுசக்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வல்லரசுகள் அத்தனையும் இடைவிடாமல் சொல்லிக்கொண்டு வருகின்றன. ரஷியாவும் அணுசக்தி ஆக்க வேலைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை செயலளவில்செய்து காட்டிக்கொண்டு வருகிறது. ஆனல் அமெரிக்கா அணுகுண்டு விஷயத்தில் சொல்லொன்றும் செயலொன்றுமாக நடந்து கொண்டு வருகிறது. தான் அணுக்குண்டை எந்த அளவில், எந்த நோக்கத்தில் பயன்படுத்துகிறது என்பதை ரகசியமாகவே வைத்துக்கொண்டு ரஷியாவைப்பார்த்து அணுசக்தியைக் கட்டுப் படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி வண்ணமிருக்கிறது. இதற்காக ஆஸ்டிரேலியா, கானடா முதலிய நாடுகளைக் கூட்டி வைத்துக்கொண்டு அணுசக்தி கட்டுப்பாடு சம்பந்தமாக தன் விருப்பப்படி ஒரு தீர்மானத்தைத் தயாரித்து வைத்துக்கொண்டு, அதை ரஷியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. எனவே அமெரிக்காவுக்கு இத்தகைய எண்ணம் 'தான் திருடி பிறரை நம்பான்' என்பதைப்போல, ஆதிக்க வெறியை அடிப்படையாகக் கொண்டு அணுக்குண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கா ரஷியாவைக்கண்டு இதைப் போன்ற அச்சம் கொள்வதில் ஆச்சரியமில்லை.

இதே சமயத்தில், ரஷியாவின் நோக்கத்தையும் நாம் உற்று உணர வேண்டும். மேற்கத்திய நாடுகளின் [illegible] உட்படாமல், தன் [illegible] வேண்டிய அளவு அணு சக்தியை பயன்படுத்திக்கொண்டு [illegible] ஆக்க வேலைக்குப் பயன்படுத்துகிறது ரஷியா என்பது ரஷிய அமைச்சர் தோழர் விஷன்ஸ்கியின் பேச்சிலிருந்து தெள்ளெனத் தெரிகிறது. அவர் மேலும் பேசிய போது மேற்கத்திய நாடுகள் ரஷியாவைப் பற்றி கொண்டுள்ள அச்சம் என்ன என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது,

"நாங்கள் அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தி வருவதைத் தடுப்பதற்குப் பெரும்பான்மை நாடுகள் விரும்புகின்றன. நங்களுடைய நிர்மாணத்தால் பிரச்னைக்குச் சரியான பரிகாரம் ஏற்படாது என்பதை அந்த நாடுகளே அறியும்"

என்று சொல்லியிருக்கிருர். எனவே மேற்கத்திய வல்லரசுகள் அணுசக்திக் கட்டுப்பாட்டைப் பற்றி அடிக்கடி பேசுவதெல்லாம் ரஷியாவிடம் அவை கொண்டுள்ள அச்சத்தின் விளைவேயன்றி, உண்மையான அமைதியில் நாட்டங்கொண்டு அவை இப்படிப் பேசுகின்றன என்பதல்ல அதன் பொருள். இந்த உண்மையைத்தான் தோழர் விஷன்ஸ்கி அம்பலப்படுத்தியிட்டார்.

## "பீப்பிள்ஸ் ஏஜ்" ஆசிரியருக்குத் தண்டனை

### 'சர்க்கார் இரகசியத்தை வெளியிட்டார்'

கம்யூனிஸ்ட் கட்சி ஆங்கில வார இதழ் 'பீப்பிள்ஸ் ஏஜ்' என்ற பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரும் அச்சாளரும், வெளியீட்டாளருமாகிய தோழர் டி. எஸ். ஹட்டங்காடி கடந்த 11-ம் தேதியன்று மாகாண நீதிபதியால் (பம்பாய்) தண்டிக்கப்பட்டார். உத்தியோக இரகசியச் சட்டத்தின் கீழ் இவருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு துவக்கத்தில்தான் பம்பாய் சர்க்கார் 'பீப்பிள்ஸ் ஏஜ்' பத்திரிகை மீது தடை விதித்தனர். ரூ. 1,200 அபராதம், கட்டத் தவறினல் 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இராணுவ அதிகாரிகளும், ஐக்கிய மாகாண சர்க்காரும் தயாரித்த இரகசிய துண்டுப் புத்தகங்களையும், தஸ்தவேஜுக்களையும் தோழர் ஹட்டங்காடி வேண்டுமென்றே வெளியிட்டாரென்பதே குற்றச்சாட்டு.

## போக்குவரத்து கார்ப்பொரேஷன்கள்

மாகாணங்களும் சமஸ்தானங்களும் ரோடு போக்குவரத்து கார்ப்பொரேஷன்களை நிறுவிக்கொள்ள அனுமதிக்கும் மசோதாவொன்றினை இந்திய சர்க்கார் தயாரித்து வருவதாகத் தெரிகிறது. இத்தகைய கார்ப்பொரேஷன்கள் ஏற்படும் பட்சத்தில் வீணன போட்டிகள் இல்லாதொழிவதோடு, வர்த்தக வியாபாரங்கட்குப் பேருதவியாயிருந்து, மக்களுக்கும் மலிவான முறையில் போக்குவரத்து சர்வீஸ்கள் அமைய ஏதுவாகும். இப்படிப்பட்ட கார்ப்பொரேஷனொன்றை நிறுவிக்கொள்ள சென்னையும் சம்மதம் தெரிவித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

## வயது வந்தோர்க்கு சமூகக் கல்வி

வயது வந்தோர்க்குச் சமூகக் கல்வியளிக்கக் கூடிய வகுப்புகளை நடத்துமாறு உயர்நிலைப் பள்ளிகளையும், ஆதார ஆரம்பப் பாடசாலைகளையும் கேட்டுக்கொள்ளலாமென்ற திட்டமொன்றைச் சென்னை கல்வி இலாகா ஆலோசித்து வருகிறது. மாகாண கல்வி ஆலோசனைக் குழு செய்த சிபார்சே இதற்குக் காரணமென்று தெரிகிறது.

# ஆசிரியருக்கு முடங்கல்

### "வேண்டாம் இந்த முறை!"

ஐயா,

அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வெளியிடுவது இப்போது மிகுந்திருப்பது மகிழ்தற்குரியதே. திராவிடர் முன்னேற்றத்துக்கு அவசியமும் ஆகும். நமது கழகச் சொற்பொழிவாளர்களுடைய நூல்களை அழகுற வெளியிட்டு வரும் நிலையம் ஒன்று சமீபத்தில் வெளியிட்ட புத்தகத்தைப் பார்த்தேன். அது கழகத் தீவிர பிரசாரகரால் எழுதப்பட்டது. புத்தகத்தின் மேலட்டை 'செக்ஸ் அப்பீல்' முறையிலிருப்பது கண்டு என் மனம் கொதித்தது. ஆபாசத்தையும் அருவருப்பையும் ஊட்டும் இந்த முகப்புப் படம் நமது கழகப் புத்தகத்திலும் இடம் பெறுவானேன்? இதனை வெளியிடுவோர் மறந்தனரா? உட்பொருள் மட்டமாயிருந்து புத்தக விற்பனையைக் கணிசமாக்கச் சிலர் கையாளும் இந்த "செக்ஸ் அப்பீல்" முறை என் நமது கழகப் புத்தகங்களுக்கும் ஏற்பட்டது? அறிவை வளர்க்கும் புத்தகங்கட்கு இந்த ஆபாச முறை வேண்டாம்! வெளியிடுவோர் கவனிக்க!

புதுவை 12-11-49 } "பாண்டியன்"

* * *

### கம்பர் விழவில் வம்பு மொழி!

ஐயா,

"மாதவமேனனைப் போலச் சிறந்த சொற்பொழிவு யாரும் ஆற்றியிருக்க முடியாது" என்று 12-11-49 அன்று கம்பர் மாநாட்டிற்குத் தலைமை வகித்த பொ. மீனாட்சிசுந்தரனார் கூறினர். அதைக் கேட்டபொழுது வந்த சிரிப்பை இப்பொழுது கூட அடக்க முடியவில்லை. நான் மட்டும் சுயநலமாக இந்தச் சிரிப்பை அநுபவிக்கலாமா? நீங்களும் அதை அனுபவியுங்கள்.

விழாவைத் திறந்து வைக்க வேண்டிய டாக்டர் ஆர். கே. சண்முகம் வரவில்லை. ஆகையால் அந்தப் பொறுப்பைக் கனம் மந்திரி மாதவமேனனுக்குக் கொடுத்தார்கள். மதி அமைச்சர் மேனன் மலையாளம், தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய நான்கு மொழிகளும் கலந்து மணிப்பிரவாள நடையில்லல; 'அவியல்' நடையில் பேசினர். பேச்சில் முக்கிய இடங்களைப் படியுங்கள்.

'நான் வால்மீகி ராமாயணத்தில் சில சுலோகம் படிச்சிருக்கண. அத்பார்த்த ராமாயணத்தைப் பார்த்திருக்கிறேன். ஞான் சின்னப்போது கம்பராமாயணம், கம்பராமாயணம் என்னு கேட்டிருக்கண. எந்ற ராஜ்யத்தில் கம்பன் கம்பன் என்றால் பைத்தியக்காரன் என்று அர்த்தம். கம்பராமாயணம் என்றால் பைத்தியக்காரன் பாடல் என்று அர்த்தம் நான் இவிட வந்து ஆனந்தவிகடன் கல்கி இதைப் படிச்சு கம்பருடைய ராமாயணத்தைத் தெரிஞ்சேன். ராமனுக்கு ஒரு அநுமான் என்றால் கம்பனுக்கு ஒரு அநுமான் 'டி. கே. சி.' என்று சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி சொன்னர். ஈன் டி. கே. சி.-க்கு அநுமான். கம்பன் லோகத்திலுள்ள எல்லா விஷயங்களையும் சுருக்கி சுருக்கி சுருக்கி ராமாயணத்தில் எழுதியிருக்கண. இதை எம்மட நாட்டில் எரிக்கணம் ஒரு [illegible] இருக்கிறது கஷ்டம். அவர் ராமாயணத்தை முழுதும் படிச்சால் அப்படிச் சொல்லாது. கம்பராமாயணத்தை எரிக்க முடியுமா? எரிச்ச சோகலவைக்கொன்று [illegible] கண்ணி மதிலையை எரிச்ச [illegible] அதிலுள்ள பக்தி [illegible] எரிக்கும்."

இப்படி உளறிக் கொட்டி பேசிமுடித்தார். ஆனந்தவிகடன், கல்கியைப் பார்த்து இராமாயணம் படித்தாராம். அப்படியானல் இராமாயண அறிவு எவ்வளவிருக்கும்? இவர் குற்றம் சாட்டுகிருர் எரிக்க வேண்டுமென்று சொல்லுகிறவர் இராமாயணத்தைப் படித்ததில்லையாம்! டி. கே. சி. ஒரு அநுமார் என்றுர் புத்திகூர்மையுள்ள சாணக்கியர் ராஜாஜி. இவர் அவருக்கு அநுமாராம்! ஒரு முழு உண்மையைக் கூறிவிட்டார். இது கூட அவ்வளவு வியப்பானதல்ல கீழே படியுங்கள்.

"கம்ப ராமாயணத்தைப் பள்ளிக்கூடத்தில் கட்டாயமாக வைத்து பையன்கள் படிக்கா விட்டால், உதைச்சு அடிச்சு படிக்க வைக்க வேண்டும். சின்னப் பிள்ளையில் எதாயிருந்தாலும் முதலிலே பாடம் பண்ண வைக்க வேண்டும். பின்னல் அதைப்பற்றித் தெரிவார்கள்"

மேலைநாட்டு உளநூல்(Psychology) அறிஞர்களும் நம் நாட்டு உளநூலோரும் எழுதிய 'கற்பிக்கும்' முறைகளைத் தவறு என்று சொல்லுகிருரா? அல்லது உளநூல் வாசனையே இவருக்குத் தெரியாதா? மதி அமைச்சர் இப்படிக் கூறுகிருர். இப்படிக் கூறுபவர் நம் நாட்டுக் கல்வி அமைச்சர். இனிக் கல்வி வளர, பெருக என்ன வேண்டும்! இப்படிப்பட்ட மகான்கள் வேண்டும். இதிலே கல்கி கம்பெனி மந்திரிகளைப் புகழ வேண்டும். மந்திரிகள் கல்கி கம்பெனியைப் புகழ வேண்டும். இதை வானொலி நிலையத்தார் ஒலிபரப்ப வேண்டும். இதைக் கம்பர் விழா என்பதைவிட, கம்பர் புகழ் பரப்பும் விழா என்பதைவிட மந்திரிகள், கல்கி கம்பெனியார் புகழ் பரப்பும் விழா என்று ஏன் சொல்லக் கூடாது? பரப்புங்கள் உங்கள் புகழை! தேடுங்கள் உங்கள் சௌகர்யத்தை!! தூங்குங்கள் தமிழர்களே!!!

சென்னை 14—11-49 } 'புலவர்'

* * *

### அரிசி வாங்க மக்கள் படும் அவதி

ஐயா,

மக்கள் உணவுப் பங்கீட்டினல் படும் அல்லல் சொல்லத்தரமன்று. கல்லும் நெல்லும் கலந்த அரிசியை உண்பதைவிட, பங்கீடு அலுவலகத்தில் (Rationing Office) அரிசி கூப்பன் வாங்குவதற்குப் படும் அவதிதான் பெரிதாகவிருக்கிறது. கூப்பன் வாங்குவதற்கு விண்ணப்பம் செய்துகொண்டால் கூபன் பெறுவதற்கு வாரக் கணக்கில் அலைய வேண்டியிருக்கிறது. "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க வேணுமே" என்ற பழமொழிபடி இருக்கிறது. அதாவது பங்கீடு அலுவலகத்திலுள்ள சில்லரைக் 'குட்டித் தேவதை'களுக்கு ஏதேனும் 'தட்சிணை' சமர்ப்பித்துவிட்டால் மக்கள் தங்கள் காரியங்களை எளிதில்-விரைவில் சாதித்துக்கொள்ள முடிகிறது. அப்படி 'தட்சிணை' கொடுக்க இயலாதவர்கள் மணிக்கணக்கில் வரிசையில் நின்று வதைபட வேண்டியிருக்கிறது.

மேலும், பங்கீட்டு விண்ணப்ப பாரங்கள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. இதனல் பாமர மக்கள் அவைகளைப் பூர்த்தி செய்ய மற்றவரை நாட வேண்டியதாகிறது. அந்த நேரத்தில் 'கழுகு போல்' அங்கு சிலர் காத்திருக்கின்றனர். அவர்கள் ஒரு 'பாரம்' பூர்த்தி செய்ய 4 அணுவரை வாங்குகின்றனர். இவ்வாறு அவர்கள் பங்கீடு அதிகாரியைவிட அதிக வருவாயை யடைகிருர்கள். விண்ணப்ப பாரங்கள் வட்டார மொழிகளிலிருந்தால் மற்றவர் தயவை மக்கள் நாட வேண்டிய நிலைமை ஏற்படாது. இது போன்ற மக்களின் குறைபாடுகளையும், அலுவலகங்களில் ஏற்படும் வேலை தாமதங்களையும் போக்க அரசாங்கம் முயலுமா?

கோடம்பாக்கம் 12—11—49 } இங்ஙனம் முதாயமாணவன்

### சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் பணவிபரங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

"மாலை மணி"

### பாரதி கட்டுரைப் போட்டி

கல்கத்தா, நவ. 11—

வரும் டிசம்பர் மாதம் 24, 25, 26 தேதிகளில் இங்குள்ள பாரதி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடக்கவிருக்கும் "பாரதி விழாவை" யொட்டி பாரதி (தமிழ்) கட்டுரைப் போட்டியொன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆர்வமுள்ள தமிழன்பர்கள், எழுத்தாளர்கள் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கட்டுரை எழுதுவதற்கு அடியிற் கண்ட மூன்று பொருள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஏதேனும் ஒன்று மட்டும் எழுதினல் போதுமானது:—

1. பாரதியின் உவமைகள்.
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
3. பாரதியின் நகைச்சுவை

கட்டுரை முழுப்பக்கங்கள் ஆறுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். போட்டிக்குரிய கட்டுரைகள் 5-12-49க்குள் அடியிற்கண்ட முகவரிக்குக் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

பாரதி தமிழ்ச்சங்கம்,
93/எ, ராஷ்விகாரி அவென்யூ,
கல்கத்தா 26.

இப்போட்டிக்கு இரண்டு பரிசுகள் உண்டு:—

முதல் பரிசு ரூ 55 பெறுமானமுள்ள தங்கப் பதக்கம் இரண்டாவது பரிசு ரூ 20/- பெறுமானமுள்ள வெள்ளிப்பதக்கம்.

பரிசு பெறும் கட்டுரையைப்பிரசுரம் செய்ய கல்கத்தா பாரதிதமிழ்ச் சங்கத்திற்குத்தான் உரிமை. போட்டி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் நீதிபதிகளின் தீர்ப்பே முடிவானது. என்று செயலாளர் ப. கு. திபாகராசன் அறிவிக்கிருர்.

### வில்லிவாக்கம் திருமணம்

வில்லிவாக்கத்தில் 13—11—49 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு திராவிட இயக்க முக்கியஸ்தராகிய தோழர் நடராசன் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்கு நடைபெற்ற இசை விருந்திற்கு உள்ளூர் வெளியூர் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தோழர் பார்த்தசாரதிக்கு மணமக்கள் சார்பாக வரவேற்பு மாலை அணிவித்தார்கள். தோழர் பார்த்தசாரதி அவர்கள் மணமக்களை வாழ்த்தியும் சீர் திருத்த திருமணத்தைப் பற்றியும் சிறிது நேரம் பேசினர்.

(கிருபர்)

### காதணி விழா

குள்ளஞ்சாவடி நவ 10—

கடலூர் வட்டம், குள்ளஞ்சாவடித் தோழர் இராசன் அவர்கள் இல்லத்தில், தோழர் இராமநுஜம் அவர்கள் செல்வி குணச்செல்விக்கு பனையபுரம் தோழர் இராம-பழனிசாமி அவர்கள் தலைமையில் 8—11—49 ம் அன்று காதணி விழா சிறப்புற நடந்தேறியது. உறவினர்களும், நண்பர்களும் ஏராளமாக வந்திருந்தனர். இதன் நினைவாக ரூபாய் 5 வரப்பெற்றோம். நன்றி!

(ஆ-ர்)

### பிறப்பு

ஆரணி, நவ. 12—

ஆரணி தி. மு. க. செயற்குழு உறுப்பினர் தோழர் டி. டி. அரசு அவர்களின் துணைவியார் தோழியர் பத்மாவதி அம்மைக்கு 16—10—49ல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி!

* * *

சென்னை, நவ. 11—

சென்னை வண்ணையம்பதித் தோழர் வி. என். துரைராஜ் அவர்களின் துணைவியார்தோழியர் மணி அம்மைக்கு 6-11-49 அன்று ஓர் ஆண் மகவு பிறந்தது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி!

(ஆ-ர்)

# பழமைக்கு இழுத்துச் செல்லும் புராணப் புரட்டுகளைத் தவிர்ப்பீர் !

## நளாயினியும் சீதையும் நங்கையர் படிப்பினைக்கு உகந்தவரா ?

## உலகம் போற்றும் ஒப்பற்ற குறளை உரியமுறையில் பயின்று தெளிவோம் !

### கோவை மாவட்ட பள்ளி மாணவரிடையே அண்ணாத்துரை

8-11-49 காலை திருப்பூர் நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளி தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில் கலந்துகொள்ள தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் 11-30 மணிக்கு வந்து சேர்ந்தார்.

அதுபோது பல மாணவர்கள் புகைப்படம்பிடிக்க, மாலையணிவித்து, பள்ளி தலைமை ஆசிரியர் தோழர் ஆர். ஜி சுப்பிரமணியமவர்கள் நீண்டதொரு வரவேற்புரை வழங்கி, அண்ணாத்துரை அவர்களைப் பேசுமாறு அழைத்தார். கூட்டத்தில் மாணவதோழர் சுந்தரத்தால் தமிழ்ப்பண் பாடப்பட்டது.

**கல்வி முறை—அன்றும் இன்றும்**

தோழர் அண்ணாத்துரை அவர்களின் சொற்பொழிவுச் சுருக்கம் வருமாறு :—

மாணவ மணிகளே! ஆசிரியத் தோழர்களே! நீங்கள் இன்று என் சொற்பொழிவு கேட்க இம்மரத்தடியில் உட்கார்ந்திருப்பது, புராண காலத்தில் மரத்தடியில் பர்ணசாலைகளமைத்து, அதில்வேதபாராயணம் போதித்து வந்ததைப் பற்றி படித்தும், கேட்டும் வந்ததை ஞாபகமூட்டுகிறது. அன்று பள்ளிகள் புராண வேத இதிகாசங்களுக்கெனவே இருந்து வந்தன இன்று அப்படியில்லாமல் பொது அறிவு நம்வாழ்வு வசதிக்கு, அறிவை உலகத்திற்கு பயன்படுத்த கல்வித் திட்டம் வகுத்து, படித்து வருகிறோம். இன்னும் பள்ளியின் பாட புத்தகங்களில், புராணப் புரட்டுகளைப் புகுத்தி, அறிவை மயங்க்வைப்பது தவறு. பள்ளியில் படிப்பு ஒன்றும், வாழ்வில் நடப்பது ஒன்றுமாக நம்மைப் பழமைக்கு இழுத்துச்செல்லும் கட்டுக்கதைகளை நம்பக் கூடாது. அதற்காகவே சுயமரியாதைச் சங்கம் பாடுபடுகிறது. இது பற்றி ஆசிரியர்கள் மிகவும் நேர்மையுள்ளத்துடன் புரட்டுகளை புரட்டுதான் என்றுஒப்புக்கொண்டு எதிர்காலத்தில் ஆட்சி செய்யப்போகும் சந்ததிகளுக்கு, அறிவுப் புரட்சியூட்டி மடமையைப் போக்குவதால் அப்பள்ளிக்கும் ஆசிரியர்களுக்கும் நாடு கடமைப்பட்டதாகும். உயர்வு, தாழ்வு மனப்பான்மையை வேரறுக்கப் பள்ளிதான்சாதனம். தமிழ் மொழி—தாய்மொழிப் பற்று ஒவ்வொருவருக்கும் இருத்தல் வேண்டியது அவசியம்" என்று கூறி தமது பேச்சை முடித்துக் கொண்டார். மேற்கூறிய பள்ளியின் ஆசிரியர், தோழர் ராகவய்யங்கார் அவர்கள் நன்றிகூற கூட்டம் ஒரு மணி நேர சொற்பொழிவிற்குப் பின் இனிது முடிந்தது.

**மாணவிகள் கடமை**

அடுத்தபடியாக டவுன் ஜீவாபாய்தேவ்ஜி பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் வேண்டுகோளுக்கிணங்கி தோழர் அண்ணாத்துரை அங்கு சென்றார். பள்ளித் தலைமையாசிரியை தோழியர் விசுவாசம் அவர்கள் அண்ணாத்துரை அவர்களை வரவேற்று, தங்கள் பள்ளிக்கு அண்ணாத்துரை அவர்களது வருகை மிகவும் பயன் தரத் தக்கதென்றும், அதற்கு பேருதவி செய்த தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்களுக்குநன்றிகூறியும் அண்ணாவைப் பேசுமாறு அழைத்தார். தோழர் அண்ணாத்துரையின் சொற்பொழிவுச் சுருக்கமாவது;—

மாணவிகளே!

இன்று உங்களுக்கென பேச வேண்டியவை ஏராளமாயினும் சுருக்கமாக முடித்துக்கொண்டு மற்றுமிரு பள்ளிகள் செல்ல வேண்டியதால, ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்கிறேன். பெண்கள் ஒழுக்கமுடையவர்களாகவும், அறிவுத் திறம் பெறவும் பள்ளிகளிலே பண்டைய காலம் போலல்லாது, ஏராளமாக அறிவு விருத்திக்கு வருமிடத்து புராண இதிகாசப் புரட்டுகளை பாடமாக்கி, அதில் சீதையின் கற்பையும், நளாயினியைப் பற்றியும் படித்து வெளியேறினால் நாடு எங்ஙனம் உருப்படும்? எதிர்கால வீரச் சந்ததிகளைப் பெற்றெடுக்கும்பெண்கள்குழந்தைகளைப் பயமகாட்டாது வளர்த்தல் வேண்டும். ஆண்களுக்குச் சரிநிகராக பொதுவாழ்வில் பெண்களும் மடமையைப் போக்க, கிராமம் கிராமமாக சென்று பாடுபட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பின் தலைமையாசிரியை பின் நன்றி கூறலுடன் கூட்டம் முடியவும் நேரே சுப்பிரமணிய செட்டியார் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றார்.

அங்கு சரியாக 1¼-மணிக்கு கூட்டம் துவக்கப்பட்டது. தோழர் அண்ணாத்துரை அவர்களையும், தோழர் எஸ். ஆர். எஸ். அவர்களையும், மற்றவர்களையும் பள்ளித் தலைமையாசிரியர் தோழர் நரசிம்மய்யங்கார் வரவேற்று, தானும் அண்ணா அவர்களும் பழைய நண்பர்கள் என்றும், இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்களென்றும், "அண்ணா" பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ ஆனர்ஸ் படித்துக்கொண்டிருக்கும்போது, தான், பி. ஏ. வகுப்பில் அதே கல்லூரியில் படித்ததாகவும். 'அண்ணா அறிவுலகச் சிற்பியாகத் திகழ்கிறார் நான் ஆசிரியனாக இருக்கிறேன்' என்றும் சுவைபடக் கூறி, அண்ணா அவர்களைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

**'நானும் ஆசிரியரே'**

தோழர் அண்ணாத்துரை அவர்கள் எழுந்து திருக்குறள் பற்றி விரிவாக எடுத்துக் கூறி, குறளுக்கும், மற்ற புராணங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்துக்கூறி, ஆரம்பத்தில்தலைமையாசிரியர்தான் ஆசிரியத்தொழில் செய்வதாகவும், 'நான் ஏதோ பெரியபொறுப்பில உள்ளதாகவும் கூறினதற்கு, விடைபகருமுறையில உண்மையிலே தானும் ஒரு ஆசிரியன் தான் என்றும், தலைமையாசிரியர் காலை நேரங்களிலே மாணவர்களுக்கு அறிவுரை புகட்டுவதாகும், ஆனால் தன் பொது மக்களுக்கு பெரியார்களின் அறிவுரைகளை மாலை நேரங்களிலே சம்பளமின்றி போதிக்கும் ஆசிரியன் என்று உரைத்தார். மேலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தமிழ்ப்பற்றை அறிவுறுத்த வேண்டுமென்றும், உலகம் போற்றும் ஈடற்ற குறள் நேரிய முறையில் போதிக்கப்படல் வேண்டு மென்றும் உரைத்தார். மாணவர்களை குறள் வழி நடக்குமாறு அறிவுறுத்தி தம் சொற்பொழிவை முடித்துக்கொண்டார்.

தலைமை ஆசிரியர் தனது பின்னுரையில், அண்ணாவின் மொழிப்படி குறள் தினமும் போதித்து வருவதாகவும், பகுத்தறிவு போதிக்கும் முதல் பள்ளி இதாகத்தான் இருக்கும் என்றும, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' எனும் முறை கைக்கொண்டு வருவதாகவும் கூறி, தம் நன்றி உரையை முடித்தார்.

மேற்படி பள்ளியில் அண்ணா மற்றும் அவர்தம் சகாககள் ஆகியோருக்குச் சிற்றுண்டியும், குளிர்பானங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவைகளை முடித்துக் கொண்டு நேரே பிஷப் உபகார சாமி உயர்நிலைப்பள்ளி சென்றடைந்தார்.

**புராண இதிகாசம் தவிர்மின் !**

பாண்டு வாத்தியங்கள் முழங்க மேற்கூறிய பள்ளியின் தலைமையாசிரியா (தந்தை) (Reefs Father) சின்னையா, அண்ணா அவர்களை வரவேற்று மாலையணிவித்து அழைத்துச் சென்றார். அதுபோது அப்பள்ளியின் தமிழ் ஆசிரியர் தோழர் நாராயண அய்யர் பேசுகையில் அண்ணா என்றால இன்று உங்களுக்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை, அவர் அறிவுடையார் அனைவருக்கும் அண்ணாதான் என்றும் அவர், தன் அறிவுத் திறனாலும், நற்கொள்கைகளை நாட்டில் பரப்பி அறிவுப் பிரசாரம் செய்து, அறிவுப் புயல் வீசவைத்து, விட்டாரென்றும், ஒருவன் பழமைக்கு பகைமைகொண்டு விட்டான் என்றால் அது அண்ணா அவர்களின் அறிவுப் பிரசாரத்தால்தான் என்றும், குறிப்பிட்டு அண்ணா அவர்களைப் பேசக் கேட்டுக்கொண்டார்.

அண்ணா அவர்கள் பேசுகையில் பள்ளிமாணவர்கள் ஒழுக்கமும், உயர்வும் பெற்றுவெளி வருபவர்கள் பெரும்பாலும் இதுபோன்ற தனிப்பட்ட ஸ்தாபனத்தால் நடத்தப்படும் பள்ளிகளால்தான்முடியும்என்றும், இங்கு புராண இதிகாசங்களுக்கும், கட்டுக் கதைகளுக்கும் இடமளிக்கப் போவதில்லையாயினும், ஓரளவு இருப்பதை காலப்போக்கில் போக்கி முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்று என்று கூறி, மாணவர்களுக்கு ஒரு சிலவார்த்தைகள் கூறி தமது சொற்பொழிவை முடித்துக் கொண்டு நேரே கோவைக்குச் சென்றுவிட்டார்.

---

## பாரதிதாசன் படத் திறப்பு விழா

16—11—49 புதன் மாலை 5-மணிக்கு
தொண்டைமண்டல உயர் நிலைப் பள்ளியில்
தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பாக
"பாரதிதாசன்" படத் திறப்பு விழா நடைபெறும்
தோழர் அரங்கராமாநுசம் அவர்கள் தலைமையில்,
**தோழர் இரா. நெடுஞ்செழியன்**
அவர்கள் திறந்து வைப்பார்.

---

### நிர்வாகத்திறமை!

"சென்ற வருஷம் ஏதோ ஒரு சமயத்தில் செய்ய உத்தேசித்த காரியம் இது. 1948-ல் இதற்கு சிறிது அவசியம் இருந்ததாகத் தோன்றியிருக்கக் கூடும். அதனால் மனுக்கள் அழைக்கப்பட்டன. ஏராளமான மனுக்கள் வந்தனவாம். அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்படாமல் சர்க்கார் காரியாலயத்தில் எங்கோ ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்தன காரியாலய சந்துபொந்துகளில் தங்கியிருந்த இந்த மனுக்கள் யாருடைய கண்களிலோ உறுத்தியிருக்கின்றன! உடனே இந்த மனுக்களை "டிஸ்போஸ்" (பைசல்) பண்ண வேண்டாமா? என்று குறிப்பு எழுதியிருப்பார். "காளை பெற்றதா? கட்டுவதற்கு கயிற்றை எடு!" என்பது போல் "ஒரு கமிட்டியை நியமித்து மனுக்களை டிஸ்போஸ் பண்ணலாமா" என்று ஒரு அதிகாரிசொல்லியிருப்பார் போலும். இதுதான் "மதுவிலக்குப் பிரசாரகர் நியமனப் பிரச்னைக்கு" புத்துயிருட்டியிருக்கும் என்று தோன்றுகிறது"

—"தினமணி" 11-11-49.

---

### வேலி பயிரை மேயாதிருந்தால்...!

குடிப்பழக்கத்தைப் போலீசார் விட்டுவிட வேண்டியது அவசியமென்றும், அவர்கள் மது அருந்துவதில் ஈடுபடாமலிருந்தால் மதுவிலக்கு மிக நன்றாக வெற்றியுறுமென்றும் டெப்யூடி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தோழர் எம். என். சௌகஸ்மா ஆமதாபாத்தில் போலீஸ் அணிவகுப்பொன்றில் குறிப்பிட்டார்.

---

### ராமநாதபுரம் மாவட்டத்துக்கு முன்னேற்றக்குழு

ராமநாதபுரம் மாவட்டத்துக்கென ஒரு முன்னேற்ற போர்டை (டெவெலப் மென்ட் போர்டு) நிறுவுவது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. அப்பகுதியின் பொருளாதார முன்னேற்றத்தை அதிகப்படுத்துவதே இப்போர்டு நிறுவனத்தின் நோக்கமெனக் கூறப்படுகிறது.

---


### சந்தா
[வெளி நாடு]

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

| | | |
|---|---|---|
| ஒரு மாத சந்தா | ரூ. | 3—0—0 |
| மூன்று மாத சந்தா | ரூ. | 9—0—0 |
| ஆறு மாத சந்தா | ரூ. | 18—0—0 |
| ஒரு வருட சந்தா | ரூ. | 36—0—0 |

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி பி: மூலம் அனுப்ப இயலாது.
மானேஜர் 'மாலைமணி'

---

தமிழருக்குப் பெருமையளிக்கும் சரித்திர நாடகம்!

டி. கே. எஸ் சகோதரர்களின் மேடைவெற்றி!! தமிழரையும், தமிழ் மொழியையும் இகழ்ந்து பேசிய வட ஆரியரை, அடிபணியச்செய்த சேரன் செங்குட்டுவனின் வீர சரிதை!

17—11—49 முதல்
தினசரி
"இமயத்தில் நாம்"
(ரா. வெங்கடாசலம் எழுதியது).
சென்னை
ஒற்றைவாடையில்

---

### விற்பனை

நல்ல நிலையில் உள்ள நாகரீகமான கை அலங்கரிக்கும் தொழிலகம் ஒன்று விற்பனைக்குத் தயார்.

விலை ரூ. 1300—0—0

இதர விவரம் நேரில்.
M. R. சந்திரன்,
531-திருவொற்றியூர் ஹைரோட்,
வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### ஆண்டாங்கரை-சிற்றூர்க்கிளை

ஆண்டாங்கரை, நவ. 9—

தஞ்சை மாவட்டம், ஆண்டாங்கரை தி. மு. கழக அமைப்புக்கூட்டம், 9—11—49ல் தோழர் அ. ஊர்துசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றகழகம்—ஆண்டாங்கரை சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ரா. கோபால கிருஷ்ணன்; நிதி உறுப்பினர்:— அ. ஊர்துசாமி; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— ரெங்கநாதன், துரைக்கண்ணு, இரா. குஜன்.

(வி-உ)

* * *

### சீலயம்பட்டி-சிற்றூர்க்கிளை.

சீலயம்பட்டி, நவ. 8—

பெரியகுளம் தாலுகா சீலயம்பட்டி தி.மு.க. அமைப்புக்கூட்டம், 7—11—49ல் தோழர் வி.எம். சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் 500க்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். தோழியர் கே. ஏ. வி. கற்பகதாஸ் திராவிட நாட்டுப்பண் பாடினார். தோழர் கே.ஏ. வடிவேல் தாஸ் தி. மு. கழகம் அமைய வேண்டி அவசியம்பற்றிப்பேசினார். பின்பு, "திராவிடமுன்னேற்றகழகம்—சீலயம்பட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். ஏ. மீரான்; துணை செயலாளர்:—வி. எம். சுந்தரம்; நிதி உறுப்பினர்:—வி.உடையார். பின்பு தோழர் துரைபாண்டியன் அவர்களால் நன்றி கூறப்பட இக் கூட்டம் இனிது முடிவுற்றது.

(செ-ர)

* * *

### நெகமம்-சிற்றூர்க்கிளை

நெகமம், நவ. 9—

30-10-49ல் தோழர் கே. அப்பாவு தலைமையில் நடைபெற்ற தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில "திராவிட முன்னேற்றக்கழகம்—நெகமம்-சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. பி. சுந்தரம்; துணை செயலாளர்:— எஸ். டி. எஸ். கோபால்; பொருள் உறுப்பினர்:—கே. அப்பாவு; விளம்பர உறுப்பினர்:— ஏ. கருப்புசாமி. ஏனைய செயற்குழுவினர்:— ஆர். ஈஸ்வரன், பி. எம். ஆர். நாதன், எம். தெண்டாயுதம், ஏ. சுப்பிரமணியம், கே. கந்தசாமி. (வி-உ)

* * *

### தாமரைக்குளம்—சிற்றூர்க்கிளை

தாமரைக்குளம், நவ. 10—

இவ்வூர் திராவிடர் கழக செயற்குழுக் கூட்டம் தோழர் கே. சோமசுந்தரம் அவர்கள் இல்லத்தில் 9—11—49 அன்று, தோழர் ச. தங்கவேலு தலைமையில் நடைபெற்றது. அதுபோது இவ்வூர் திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—தாமரைக்குளம சிற்றூர்க்கிளை" என மாற்றப்பட்டதாக ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— கு. தங்கவேலு; பொருள் உறுப்பினர்:— கு சோமசுந்தரம்; விளம்பர உறுப்பினர்:— ச. மருதமுத்து. பின்பு செயலாளர் நன்றி கூறக்கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

* * *

### நிலக்கோட்டை—சிற்றூர்க்கிளை

நிலக்கோட்டை, நவ. 9—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் கோவில் பிள்ளை தலைமையில் 8—11—49 அன்று நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—நிலக்கோட்டை சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-இ.காத்தான்; துணைச் செயலாளர்:-கே. அய்யாத்துரை, பொருள் உறுப்பினர்-ப. பச்சையப்பன், விளம்பர உறுப்பினர்-எம். சையத் இப்ராகிம். ஏனைய செயலுறுப்பினர்கள்—வே. சூரிய நாராயணன், எ. அ. கோவில் பிள்ளை, வ. இரத்தின சபாபதி, எஸ். நடராஜன், மா. இரத்தினசாமி. பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

### மேலகற்கண்டார் கோட்டை—சிற்றூர்க்கிளை

மே. கற்கண்டார்கோட்டை, நவ.8-

6—11—49-ல் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி. மு க. அமைப்புக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—மேலகற்கண்டார்கோட்டை சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ்.காளிமுத்து; துணைச் செயலாளர்:— டி. ஆர். கோவிந்தராசன்; பொருள் உறுப்பினர்:—கே. துரைராசு; விளம்பர உறுப்பினர்,— எம். மாணிக்கம். ஏனைய செயலுறுப்பினர்கள்:— ரெங்கநாதன், பெருமாள், பி. முருகேசன், கிருஷ்ணமூர்த்தி; ஏ. சுந்தரம்.

தோழர்கள் நாகை வி. எஸ். பெருமாள், சி. எஸ். ராஜு, எம். மாணிக்கம், டி. ஆர். கோவிந்தராசன் ஆகியோர் தி. மு. கழகம் அமைய வேண்டிய அவசியம் குறித்துப் பேசினர். பின்பு செயலாளர் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

* * *

### சிந்தாமணி—சிற்றூர்க்கிளை

சிந்தாமணி, நவ. 10—

விழுப்புரம் வட்டம், சிந்தாமணியில் தி. மு. க. அமைப்புக்கூட்டம் தோழர் விசுவநாதன் அவர்கள் இல்லத்தில் 6—11—49ல் நடைபெற்றது. பழையபுரம் தோழர் இராம-பழனிசாமி அவர்கள் கூட்டத்திற்குத்தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் "திராவிட முன்னேற்றக் கழகம்—சிந்தாமணி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-கோ.ஜெயராமன், துணைசெயலாளர்:—இரா. இரங்கநாதன்; நிதி உறுப்பினர்:-ச. இராமநாதன்; விளம்பர உறுப்பினர்:— பாலகிருட்டினன். ஏனைய உறுப்பினர்கள்:—ச. வேணு, வ. ரங்கநாதன், இராகவன், ச.கோவிந்தன், ச. இராமசாமி, ஆர். கே. அண்ணாமலை, ா. நவநீதகிருட்டினன், ஈ. கண்ணன், ா. நடராசன், பி.கோவிந்தன், வி. கோவிந்தசாமி, து. அய்யாக்கண்ணு, மா. சின்னக்கண்ணு, கா. விசுவநாதன், சி. கோவிந்தராசு, ஜி. ஆர். ராசன், பி. சமயலிங்கம், ஏ. சாமிக்கண்ணு, செகதேவன், தங்கலிங்கன், சிவலிங்கம், பி. ரங்கநாதன், ஏ. எம். வேலு, எத்திராசன், எஸ். ராமலிங்கம். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

## மற்ற மாகாணங்களுக்குதவும் மத்திய சர்க்கார், சென்னை மாகாணத்தைத் திண்டாடவிடுவதேன்?

### கலைபயில் கூடங்கள் வசதியின்றி வாடுவதா ?

### தோழர் ஜி. டி. நாயுடுவின் மனமுடைந்த பேச்சு

"பள்ளிகள் பல மூடப்பட்டன; புதிய கல்லூரிகளும் பல் தொழிலியற் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. ஆனால் அவைகளுக்குப் போதுமான இட வசதியோ, தளவாட வசதியோ, ஆசிரியர்கள் வசதியோ கிடையாது. ஏனைய மாகாணங்கள் தங்களுக்குத் தாங்களே வசதி செய்து கொள்கின்றன. அல்லது மத்திய சர்க்காரின் உதவியைப் பெரிதும் பெறுகின்றன; ஆனால் தென்னிந்தியாவைச் சோதநாமோ தொழிற்சாலைகளை மூடிப்போடும் நிலைக்கு வந்துவிட்டோம். யந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையொன்று தோற்றுவிக்க வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். நவீனகால கல்வி முறைக்கு இது இன்றியமையாததாகும்"

என்று மோட்டார் மன்னர் தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினர்கள் முன்னிலையில் கடந்த 9-ந் தேதியன்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பல்கலைக் கழகக் கமிஷனின் உறுப்பினர்களாகிய டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், தோழர் சி. இ. பிரஸ்டன் (ஐதராபாத்) டி. எல். தேசபந்து, பேராசிரியர் கே. ஜி. ஜோஷி ஆகியோர் தோழர் ஜி. டி. நாயுடு அவர்களால் வரவேற்கப்பட்டு தேநீர் விருந்தளிக்கப் பட்டனர்.

தோழர் ஜி. டி. நாயுடு மேலும் பேசுகையில், நம் பெண்களுக்குக் குடும்ப விஞ்ஞானம்பயிற்று விக்க வேண்டியது மிக மிக அவசியமென்றும், குடும்ப விஞ்ஞானக்கல்லூரியொன்று நிறுவப்பட வேண்டியது இன்றியமையாததென்றும், கோவையில் இத்தகைய கல்லூரியொன்றை நிறுவசர்க்கார் முற்படுவரேல் அதற்கான கட்டிடத்தைத் தந்துதவ தான் தயாரென்றும் குறிப்பிட்டார்.

சர். ஏ. லட்சுமணசாமி பேசுகையில் கல்வி, தொழிலியல் துறையில் தோழர் நாயுடுவின் தொண்டினைப் பாராட்டிப் பேசினர்.

### முனிசிபல் கவுன்சில்களுக்கு நிறைந்த அதிகாரம்

முனிசிபல் கவுன்சில்களை நிறைந்த அதிகாரம் படைத்தவையாகும் வகையில் முனிசிபல் நிர்வ கத்தைத் திருத்தியமைக்கும் பிரச்னையை சர்க்கார் நீண்ட காலமாகவே ஆய்ந்து வருகின்றனரென்று, சென்னை சர்க்காரின் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது. இது சம்பந்தமாகப் பிரச்னைகளை ஆய்ந்து, இப்பொழுதைய முனிசிபல் சட்டத்துக்குச் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றியெல்லாம் யோசனை கூறுமாறு கமிட்டியொன்றை நியமிப்பதென சர்க்கார் முடிவு செய்துவிட்டனர். அக்கமிட்டியில் உத்தியோகச் சார்பற்ற பிரமுகர்களும முனிசிபல் நிர்வாக சம்பந்தமான சர்க்கார் இலாகாக்களின் தலைவர்களும் இருப்பர். தோழர் சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் (கோவை) இக்கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சிங்கியாங்கில் யூரேனியம்

### அணுக்குண்டுக்குகந்த உலோகம்

வடமேற்கு சீனாவைச்சேர்ந்த சிங்கியாங் மாகாணத்தில் யூரேனியம் பெருவாரியாகக் கிடைக்கக்கூடு இருக்கின்றதென்பதாக பிரபல சீனவிஞ்ஞானியான டாக்டர் ஹோ ப யூவான் தெரிவிக்கிறார்.

சீன எஞ்சினியரின் சங்கத்தின் ஆண்டுவிழாக் கூட்டத்தில் பேசிய ஹோ, ரஷ்யா அணுக்குண்டு தயாரித்து வருகிறதென்பதில் தனக்கொன்றும் சந்தேகமே இல்லையென்று குறிப்பிட்டார்.

சிங்கியாங் மாகாணம் சோவியத்யூனியன் எல்லைக் கோட்டையொட்டியுள்ள மலைப்பகுதியாதலால் ரஷ்யர்கள் அப்பகுதியில் உலோகங்களை வெட்டியெடுத்துக் கொள்ள உரிமை கொண்டாடுவதாகக் கூறப்படுகிறது. இம் மாகாணத்தின் தெற்குப் பகுதியை அண்மையில்தான் சீன கம்யூனிஸ்டுகள் கைப்பற்றினர் ஆதிக்கப்படுத்தினர்.

### தேதி-கிழமையாரம்!

மணி மட்டுமின்றி தேதி, கிழமை முதலியவற்றையுங்காட்டும் புதுமாதிரி கைக்கடியாரங்களை ஸ்விஸ்நாட்டு உற்பத்தியாளர்கள் விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். இத்தகைய கைக்கடியாரம் ஒன்றின் விலை, 150 பவுன் ஆகிறதாம்.

## மதிப்புரை

### தாழ்த்தப்பட்டோர் கண்ணீர்த்துளிகள்

[ஆசிரியர்: க மாணிக்கவாசகன் கிடைக்குமிடம்: உரிமைப் பதிப்பகம் 160 மங்களபுரம், சேத்துப்பட்டு சென்னை. விலை ஆறணா.]

தோழர் க. மாணிக்கவாசகன் அவர்கள் இயற்றிய "தாழ்த்தப்பட்டோரின் கண்ணீர்த் துளிகள்" என்னும் இச்சிறு கவிதை மலர் வரப்பெற்றோம். ஆதிதிராவிடர்களின் அவல நிலை கண்டு ஆசிரியர் இக்கவிதைகளைத் தீட்டியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது. "ஆதியினம் என்ற காரணத்தால் எமமை அடிமைபடுத்தும் அறிவிலிகாள்" என்று ஆரம்பித்து உயர் சாதிக்காரரா, ஊராளவோரா, செல்வர்கள் ஆகியோரை "என் இந்த அநீதி?" என்று தட்டிக்கேட்கிறார்; கலப்பு மணத்தை வற்புறுத்துகிறார். சாதிகளைச் சாடுகிறார்; வீரபழங்குடியே எத்தனை நாளைக்கு இந்த நிலை உனக்கு" என்று பழங்குடி மக்களைப் பார்த்து கேட்டு, அவர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறார். "ஏழைகளை வாழவைக்க எழுதுத் தம்பி" என்று சொல்லி எழுத்தாளர் உலகுக்கு அறிவுறுத்துகிறார். கவிதைகள் இனிய எளிய நடையில் அமைந்துள்ளன. உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே உரைத்திருக்கிறார். "தாழ்த்தப்பட்டோரின் கண்ணீர்த் துளிகள்" என்று இக்கவிதை நூலுக்குப் பெயரிடப்பட்டிருப்பது மிக மிகப் பொருத்தமானதாகும். அனைவரும் படிக்க வேண்டியதே. படித்துப்பாருங்கள்.

—டி. எஸ். வி.

### திருமணம்

கடலூர் (ஓ.டி), நவ. 12—

தோழர் தியாகராசன்- தோழியர் கனகவல்லி திருமணம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில், 11—11—49 அன்று நடைபெற்றது. அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், குடந்தை எஸ். கே. சாமி, சேலம் சித்தையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் இளங்கோ நன்றிகூற, திருமணம் இனிது முடிந்தது.

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி எதும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

K. R. ராமசாமியின்,
கிருஷ்ணன் நாடகசபையாரின்
புதிய கலைச் சித்திரம்!

ஈரோடு, அர்ச்சுனன் அரங்கில்,
15—11—49 செவ்வாய் முதல் தினசரி.

சிலம்பு

(நாடகம்)
By, A. K. வேலன்

"காதல், கடமை, நீதி" இவற்றிற்கு இலக்கியமாக வாழ்ந்த மூன்று தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கியம்

தினசரி இரவு 10-க்கு ஞாயிறு மாலை 6-30 க்கு
(திங்கள் விடுமுறை)

கட்டணம்:—2-8-0, 1-8-0, 0-12-0, 0-6-0.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.